# மியாட் மருத்துவமனையுடன் செஷல்ஸ் மருத்துவப் பல்கலைக்கழகம் உடன்பாடு

சென்னை, பிப்.12 சென்னை மியாட் மருத்துவமனையின் ஒத்துழைப்புடன் தங்களது நாட்டில் மருத்துவ பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்படும் என்று செஷல்ஸ் குடியரசு துணைத் தலைவர் ரோலன் டேனி ஆன்டோய்ன் ஃபாரே கூறினார்.

மியாட் மருத்துவமனையின் 15-ஆவது ஆண்டு நிறுவன தினம் புதன்கிழமை (பிப்.12) கொண்டாடப்பட்டது. இதில் ரோலன்டேனி ஆன்டோய்ன் ஃபாரே சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசியதாவது:



மியாட் மருத்துவமனையின் 15-ஆவது நிறுவன தின விழாவை முன்னிட்டு மகேஷ் நினைவு அறக்கட்டளையின் அறங்காவலர் அருணா சுப்ரமணியத்திடம் ரூ.10 லட்சத்துக்கான காசோலையை வழங்குகிறார் இயக்குநர் ராஜீவ் மேனன். உடன் (இடமிருந்து) மல்லிகா மோகன்தாஸ், டாக்டர் பிருத்வி மோகன்தாஸ், செஷல்ஸ் நாட்டின் குடியரசு துணைத் தலைவர் ரோலன்டேனி ஆன்டோய்ன் ஃபாரே, அறக்கட்டளையின் மற்றொரு அறங்காவலர் ஜெயேந்திரா, டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ்.

தொலைநோக்குப் பார்வையுடன் தரமான மருத்துவ சேவை அளித்துவரும் மியாட் மருத்துவமனையையும், அதன் நிர்வாக இயக்குநர் டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸையும் பாராட்டுகிறேன். மியாட் மருத்துவமனையின் இத்தகைய சிறந்த வளர்ச்சியில் அதன் தலைவர் மல்லிகா மோகன்தாஸுக்கும் பங்கு உண்டு. தந்தை டாக்டர் மோகன்தாஸின் மருத்துவப் பணியைத் தொடரும் ஆற்றலை டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் பெற்றுள்ளார். செஷல்ஸ் நாட்டு மக்கள் மட்டுமின்றி சூடான், தான்சானியாவைச் சேர்ந்தவர்களும் மியாட் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பலன் அடைந்துள்ளனர். மியாட் மருத்துவமனையின் 15 ஆண்டு கால மருத்துவ அனுபவத்தைப் பயன்படுத்தி செஷல்ஸ் நாட்டில் மருத்துவ பல்கலைக்கழகம் ஏற்படுத்த ஆவன செய்யப்படும். இதற்காக செஷல்ஸ் நாட்டு மருத்துவர்கள் சென்னை மியாட் மருத்துவமனையில் பயிற்சி பெறும் வகையில் புதன்கிழமை (பிப்.12) ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது என்றார் ரோலன்டேனி ஆன்டோய்ன் ஃபாரே.

புற்று நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால் குணப்படுத்த முடியும் என விழிப்புணர்வு ஏற்படுத்த இந்தோ-பிரிட்டிஷ் ஹெல்த் இன்ஷியேட்டிவ்-ன் சேர்வாக் மூலம் கடந்த ஆண்டு நடைப் பயணம், கண்காட்சி உள்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதை இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் விளக்கினார். நடைப் பயணத்தில் பங்கேற்றோர் எடுத்த புகைப்படங்களை விற்பனை செய்து கிடைத்த ரூ.10 லட்சத்தை குழந்தை புற்று நோயாளிகளுக்கு உதவும் வகையில் மகேஷ் நினைவு அறக்கட்டளைக்கு அளிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மியாட் மருத்துவமனையில் கல்லீரல் மாற்று சிகிச்சைப் பிரிவு தொடங்கப்பட்ட சிறிது காலத்திலேயே 20 பேருக்கு கல்லீரல் மாற்று சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாகவும் 90 சதவீதம் பேருக்கு கல்லீரல் மாற்று சிகிச்சை மூலம் பலன் கிடைத்துள்ளதாகவும் பிரிவின் தலைவர் டாக்டர் சுரேந்திரன் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பிரிட்டிஷ் முன்னாள் துணைத் தூதர் மைக் நிதாவ்ரியானகிஸ், செஷல்ஸ் அரசுப் பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.